மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au





# ஆண்டு 5

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

# நாமும் எம் தமிழ் இலக்கியங்களும்

சங்கம் வைத்து மொழி வளர்த்துக் காப்பியங்கள், இலக்கியங்கள் என வளர்ந்தது எம் தாய்மொழி. அவை மட்டுமல்ல கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, வானவியல் , வானசாஸ்திரம் என வளர்ந்தோம் நாம்.

**சிலப்பதிகாரம்**
**மணிமேகலை**
**குண்டலகேசி**
**வளையாபதி**
**சீவக சிந்தாமணி**
ஆகிய எம் ஐம்பெருங்காப்பியங்கள் அறம், நீதி, இரக்கம், கருணை, உண்மை, தியாகம், நேர்மை போன்ற உயரிய பண்புகளையே எமக்குக் கற்பிக்கின்றன.

மங்கோலியாவின் பெண் மருத்துவர் நொமின் தமிழரின் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையை அந்நாட்டு மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டு தமிழர் பெருமை பாடிக் கொண்டிருக்க நாம் இங்கு என்ன செய்து கொண்டிருக்கின்றோம்?

கனடா வாழ் ஈழத்தமிழர்கள் மூவர் உலகப் பொதுமறையாம் திருக்குறள் மீது சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றதன் மூலம் தமிழிற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
கையிலெடுங்கள் எம் அழகான தமிழ் இலக்கியங்களை....

**வாழுங்கள் தமிழனாய்!**
**எழுங்கள் தமிழிற்காய்!**

நன்றி.
வணக்கம்.













**ஆக்கம்:**
**திருமதி. பலோமியற் அன்ரனி ஸ்ராலின்**